*1981 பிப்ரவரி 27]*

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பேத்துவார சாகுபடியின் கீழ் உள்ள மொத்த நிலப்பரப்பு எவ்வளவு ? எவ்வளவு பேர்கள் அதில் ஈடுபட்டுள்ளனர் என்ற விவரத்தை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, மொத்தம் 3748.33 ஏக்கர். அதிலே, வேலை செய்கிறவர்கள் 1,917 பேர்கள். இருக்கிற நிலச் சொந்தக்காரர்கள் 2,400 பேர்கள்.

கல்லூரியில் நடைபெறும் ராகிங்.

*வினா எண். 284—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்லூரிகளில் நடைபெறும் 'ராகிங்கை' சட்டபூர்வமாக தடை செய்யும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கல்லூரிகளில் நடைபெறும் 'ராகிங்கை' (Ragging) சட்டபூர்வமாக தடை செய்யும் உத்தேசம் அரசுக்கு இல்லை. எனினும் கல்லூரி மாணவர்கள் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுதல் கூடாது என்று கல்லூரி கல்வி இயக்குநரால் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் 'ராகிங்' என்பது வேடிக்கையாக இல்லாமல், அது ஒரு சித்திரவதையாக நடந்து கொண்டிருக்கிறது. இந்த ராகிங்கினால், எந்த எந்தக் கல்லூரிகளில் யார், யார் இறந்திருக்கிறார்கள். மாணவர்களுக்குப் பாதுகாப்பு தருவதன் மூலம் அப்படி இறக்காதவண்ணமும், சித்திரவதைகள் நடைபெறாத வண்ணமும், அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க உத்தேசம் உள்ளதா ? ராகிங்—சித்திரவதை—செய்த மாணவர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ராகிங் என்பது கேலி செய்வது என்கிற அடிப்படையிலேதான் சட்டபூர்வமாக தடை செய்யும் உத்தேசம் அரசுக்கு இல்லையென்று சொன்னேன். ஆனால், சித்திரவதை செய்வது, அத்துமீறி நடப்பது தவறானது. அப்படிப்பட்ட மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நாம் கல்லூரி முதல்வர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறோம்.

[1981 பிப்ரவரி 27

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் சமீபத்தில் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தேன். அங்குள்ள கல்லூரிகளில் ராகிங் முறை/பெண்களை ஆண்கள் ராகிங் பண்ணுவதும், ஆண்களை பெண்கள் ராகிங் பண்ணுவதும், நடந்து கொண்டிருக்கிறது. அதேமாதிரி நமது தமிழ் நாட்டிலுள்ள கல்லூரிகளில் இப்படி உயிர்ச்சேதம், சித்திரவதை இல்லாத வகையில் ராகிங் செய்வதற்கு அனுமதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாணவர்கள் படிக்க வேண்டுமென்றுதான் நாம் விரும்புகிறோம். ராகிங் செய்வது, கேலி செய்வது, அதைத் தடை செய்வது என்கிற அளவிற்கு வருமானால், மற்றபடி சாதாரண நிலையிலே உள்ள தவறுகளுக்கு எல்லாம் கூட சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். அது கேலி செய்வது என்பதையெல்லாம் தடை செய்வது என்பது போல்தான் வரும். ஆகவே, அந்த உத்தேசம் இல்லையென்று சொன்னேன். அதற்காக, அதை நாம் ஆதரித்து, எல்லோருமே கேலி செய்ய ஆரம்பியுங்கள். நீங்கள் போய் அவர்களை கேலி செய்யுங்கள், நீங்கள் போய் இவர்களை கேலி செய்யுங்கள் என்று சொல்லி, அதை வளர்க்கவோ அல்லது ஆதரிக்கவோ என்ற அந்த முயற்சிலே அரசு ஈடுபட விரும்பவில்லை என்பது மட்டும் அல்ல, அதை நாம் ஏற்றுக்கொள்ளவும் இல்லை. ஆகவே, நமக்கிருக்கிற அக்கறை மாணவர்கள் படிக்க வேண்டுமென்பதோடு, படிக்க வருகின்ற மாணவர்கள் அந்தப் படிப்பு தொடருகின்ற வண்ணம், மாணவர்கள் ஒருவருக்கொருவர் பழக வேண்டும். அந்த அடிப்படையிலே சகோதர மனப்பான்மையோடும் தோழமை உணர்வோடும் பழக வேண்டும். அதை நாம் ஆதரிக்கிறோம்.

[முற்பகல் 9-20]

திரு. கோ. விஸ்வநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப காலத்தில் சீனியர் மாணவர்களுக்கும், ஜூனியர் மாணவர்களுக்கும் சுமுகமான உறவை ஏற்படுத்துகின்ற வகையில், அவர்களை அறிமுகப்படுத்துகின்ற முறையில் இந்த ''ராகிங்'' முறை விளையாட்டாகத்தான் இருந்தது. அதிலே கொஞ்சம் கஷ்டமான காரியம் அவர்களுக்கு போலி ஆயில் கொடுப்பார்கள். கிரஸின் உட்பட எல்லா எண்ணெயும் அதில் கலந்திருக்கும். அந்த முறை இன்றைக்கு ஆபத்தாக முடிகின்ற அளவுக்குப் போய்விட்டது. இந்த முறை ஆண்கள் கல்லூரியில் இருந்து இப்போது பெண்கள் கல்லூரிகளுக்கும் பரவி, சில இடங்களில் தற்கொலை செய்து கொள்ளுகின்ற அளவுக்கும் போயிருக்கிறது. எனவே, இதுகுறித்து கல்லூரி முதல்வர்களின் கருத்தை அரசாங்

கம் அறிந்ததா ? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் இதற்கு தடை இல்லை என்று சொன்னால் அதற்காக வேறு முறைகளைக் கடைப்பிடிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடை இல்லை என்று சொல்லுகிறபோது, தடை செய்தால் அல்லது அதைக் குற்றம் என்று நாம் சொல் வோமானால் அதை நடைமுறைப்படுத்துகின்ற அளவுக்குச் சட் டம் வேலை செய்ய வேண்டும். அந்தச் சட்டமே கேலிக்குரிய தாகிவிடுகின்ற நிலைமையிலேதான் அது வந்து சேரும். காரணம் இதுவே கேலி செய்கின்ற விஷயம். கேலி செய்வது என்பது சாதாரணமாகப் பேசினால் கூட அது கேலிதான். அந்த அடிப் படையில்தான் நாம் அதைக் குற்றமாகக் கருதி சட்டம் கொண்டு வருவதற்கு விரும்பவில்லை என்று சொல்லுகிறோம். சட்டப்படி அதை அமல் நடத்த முடியாத சூழ்நிலை ஏற்படும். ஆனால், அதற்காக மாணவர்கள் எல்லை மீறிப் போய் மற்றவர்களைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு காரியங்களைச் செய்வதற்கு யாருக்கும் உரிமை இல்லை. அதைக் கல்லூரித் தலைவர்கள் கவனித்து அந்த மாணவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து அவர்களைத் தண்டிக்கலாம். அதற்கு மேற்கொண்டு அரசு தலையிடவேண்டிய சந்தர்ப்பம் அந்த அளவுக்கு இருக்குமானால் அதைப் பற்றி அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இந்த ராகிங் முறையே முதலாண்டு கல்லூரியில் சேருகின்ற மாணவர் களை அந்தக் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கின்ற 2-ஆம் ஆண்டு 3 ஆம் ஆண்டு மாணவர்கள், ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்காக ஏற்பட்ட முறையாகும். இதே மாணவன் 2-ஆம் ஆண்டு 3 ஆம் ஆண்டுக்கு வருகின்ற நேரத்தில் இதே போன்று முதலாண்டு சேரவருகின்ற மாணவர்களை ராகிங் செய் யும் நிகழ்ச்சிகள் ஏற்படுகின்ற பழக்கம் இருக்கின்றது. இது எப்படி இருக்கிறது என்றால் இன்றைக்கு மருமகளாக இருக்கின் றவர்கள் மாமியார்கள் தொல்லைக்கு ஆளானாலும் கூட, நாளைக்கு அவர்களே மாமியார்களாக ஆகின்ற காலத்திலே மரு மகளுக்குத் தொல்லை கொடுக்கின்ற மாதிரி அது ஆகின்ற நிகழ்ச்சி யாக இருக்கின்றது. ஆகையினாலே இதனை ஒரு வரம்புக்கு மீறாமல் பார்த்துக்கொண்டு, மொத்தமாக தடை செய்யாமல், நடவடிக்கை எடுக்கின்ற வகையிலே அரசு முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, வரம்பு மீறாமல் போகின்றதற்கு தேவையான நடவடிக்கைகளை அரசு இப்போதும் எடுத்துக் கொண்டு வருகிறது. அது ஒரளவுக்கு

தற்போது குறைந்திருக்கிறது. இதற்கு முன்னால் இருந்ததை விட இப்போது குறைந்திருக்கிறது என்று சொல்லலாம். ஏனென்றால், எங்களுக்கு வருகின்ற புகார்கள் குறைச்சலாக இருக்கின்றன. இதை எல்லாம் தவிர்க்க வண்டுமானால் மாணவர்கள் எதற்காக கல்லூரிகளுக்கு வருகின்றார்கள் என்ன நோக்கத்தோடு படிக்கின்றார்கள் என்பதை அவர்களும் தெரிந்து கொண்டு, அவர்களை அனுப்புகிற பெற்றோர்களும் புரிந்து கொண்டு, சொல்லிக் கொடுக்கிற ஆசிரியர்களும் அந்த அடிப்படையில் கல்வி கற்றுத் தருவார்களானால், அப்போதுதான் இது நிற்கும். நடைபெறுகின்ற அந்தக் கேலி செய்வது எல்லாம், ஒரு அனுபவபூர்வமாக தோழமை உணர்வை அதிகப்படுத்துவதாக இருக்கும். ஆகவே, படிக்க வருகின்றவர்கள் தம் அறிவை வளர்த்துக்கொள்ள வருகிறோம், நாம் சமுதாயத்தில் நல்ல குடிமக்களாக ஆக வருகிறோம் என்ற அந்த எண்ணத்தின் அடிப்படையிலே படிக்க அவர்கள் கற்றுக் கொள்ள வருவார்களானால் அப்போதுதான் சரியாக இருக்கும். சமுதாயத்திலே இருக்கிற சூழ்நிலை அத்தகைய உணர்வுகளைத் தூண்டுகிற விதத்தில் இல்லை. சமுதாயத்திலே இருக்கிற நிலைமை, நல்ல ஒழுக்கமுள்ள மாணவர்களாக வெளியேறுகிற வகையிலே இல்லாத ஒரு பிரதிபலிப்பை, எப்படி இருந்தாலும் அவைகளை எல்லாம் தவிர்க்க முயற்சி எடுத்துக்கொள்கிறோம்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, ''ராகிங் முறை'' வெள்ளைக்காரர்களால் ''ஸ்போர்ட்டிங் ஸ்பிரிட்டில்'' செய்யப்பட்ட ஒன்றாகும். ஆனால், தற்சமயம் புதிதாகக் கல்லூரிக்கு வந்து சேரும் மாணவர்களை இம்சிப்பதும், அவர்கள் அவமானம் தாங்காமல் தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்கும் நிலைமை போய் இருக்கிறது. காரைக்குடி இன்ஜினீரிங் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த மாணவன் அவமானம் தாங்காமல் தற்கொலை செய்து கொண்டான் என்பது அரசுக்குத் தெரியுமா? மாணவர்களின் படிப்பு எந்தவிதத்திலும் பாதிக்கப் படாமல் இருக்கிற வகையில், இந்த ராகிங்கை தடை செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்த முறையை நாம் ஆதரிக்கவில்லை. அது வளர்வதையும் நாம் விரும்பவில்லை. இதனால், மாணவர்கள் துன்பம் அடைவதையும் நாம் ஆதரிக்க வில்லை. அதைத் தடுப்பதற்காக இப்போதுள்ள சூழ்நிலையில் நடவடிக்கை எடுத்து வருகிறோம். சட்டத்தின் மூலம் அதைத் தடை செய்ய வேண்டும் என்று சட்டம் கொண்டு வரலாம். ஆனால், அதை நல்லபடியாக அமல் நடத்த முடியாது என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். சில கல்லூரிகளில் புதிதாக வருகிற மாணவர்கள் இரயில்வே ஸ்டேஷனுக்கே சென்று வரவேற்று இருக்கிறார்கள். அந்த அளவிற்கு மாணவர்கள் மத்தியில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது.

இப்படி பரவலாக வருகிறபோது நிலைமைகள் சரியாக ஆகி விடும். மாணவர்கள் மத்தியில் அந்த உணர்வுகளை வளர்கின்ற முயற்சியில் நாம் எல்லோரும் ஆங்காங்கே ஈடுபடுவோமானால் இது ஓரளவிற்கு சரியாகப் போய்விடும்.

டாக்டர் கே. சௌரிராஜன்: தலைவர் அவர்களே, விளை யாட்டே வினையாகும் என்ற அடிப்படையில் அன்றைக்கு விளை யாட்டாக துவங்கப்பட்ட "ராகிங்" முறை இன்றைக்கு வேதனைக்கு வித்தாக ஆகிவிட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். ஆரம்ப காலத்தில் "இன்டலிஜென்ட் டீசிங்" என்பதில் ஆரம்பித்து இன்று "பிசிகல் டீசிங்" என்கிற அளவிற்கு அந்த ராகிங் முறை வளர்ந்துவிட்டது. அதுபோக ஆண்கள் பெண்களை கேலி செய்தால் பொறுமையின் அவதார மாக இருக்கும் அவர்கள் ஓரளவிற்குப் பொறுத்துக்கொள்வார் கள். ஆனால், பெண்களே ஆண்களை கேலி செய்தால் அவர்கள் அவமானம் தாங்காமல் தற்கொலை செய்து கொள்ளக்கூடிய நிலைமைக்குப்போய்விடுகிறது. ஆகவே அந்த அடிப்படையில் "கோ-எஜிகேஷன் இருக்கின்ற கல்லூரிகளிலாவது, உடனடி யாக அந்த ராகிங் முறையைத் தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். என்னிடத்தில் நேற்றுகூட ஒரு கடிதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைக்கேள்வி கேட்ட தோடு நிறுத்திக்கொள்ள வேண்டும். வினா நேரத்தில் ஆதாரங் களைக் காட்டி பேசிக் கொண்டிருக்கக் கூடாது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, "ராகிங் செய்வதைப்பற்றி இதற்கு முன்னாலே நான் சொன்ன பதிலின் அடிப்படையிலேயே இதற்கும் பதில் சொல்ல விருமபுகிறேன். இப்போது நிலைமைகள் குறைந்து வரு கிறது. ஆண்கள் பெண்களை ராகிங் செய்வது என்பது கல்லூரி களில் மட்டும் அல்ல. வெளியே கூட இருக்கிறது. இது மிகத் தவறான நடைமுறையாகும் பெண்களுக்கு நாம் நல்ல பாதுகாப்பு கொடுக்க வேண்டும். நம்முடைய குடும்பப் பெண்களுக்கு பாது காப்பு கொடுக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அதைப் போன்று ஒவ்வொரு குடும்பத்தில் உள்ளவர்களும் தங்கள் தங்கள் பெண்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்கிற அடிப்படையில் நடந்து கொண்டால், சமுதாயத்தில் பெண்கள் கவுரவம் காப்பாற்றப்படும். பெண்கள் ஆண்களை கேலி செய் வது, அதற்காக ஆண்கள் தற்கொலை செய்து கொள்வது என்றால் அந்த ஆண்களைப் பற்றி நாம் பரிசீலனை செய்ய வேண்டியதுதான். (சிரிப்பு).

[1981 பிப்ரவரி 27

திரு. ஜே. எஸ். இராசு : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் மதுவிலக்கு மிகவும் கடுமையாக அமல் படுத்தப்படுவதாக சொல்லப்படுகிறது. ஆனால், இந்த ராகிங் செய்கின்ற மாணவர்கள் சாதாரண புதிய மாணவர்களை மது குடிக்கக் கட்டாயப் படுத்துகிறார்கள், முடியாது என்று சொன்னால், அவர்கள் கல்லூரியையும் விடுதியையும் விட்டு ஊருக்குச் செல்கிறேன் என்று அனுமதி கேட்டு முதல்வருக்கு கடிதம் எழுதி கொடுத்துவிட்டுச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, குறைந்தபட்சம் குடிக்க முடியாது என்று சொல்கின்ற மாணவனுக்குப் பாதுகாப்பு தந்து, அவர்களுடைய கல்வி பாதிக்காத அளவிற்குச் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட குறிப்பிட்ட சம்பவங்கள் பற்றி எங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படுமானால் நிச்சயமாக அதைப் பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது. ஒழுங்காக நடக்கும் மாணவர்களும் இருக்கிறார்கள். தவறு செய்கிற மாணவர்கள் மீது நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது பல கல்லூரிகளில் எடுக்கப்பட்டு இருக்கின்றன.

சின்னமனூரிலுள்ள ஸ்ரீ கிருஷ்ண அய்யர் மேல்நிலைப்பள்ளி.

*வினா எண். 285—திரு. ப. நெடுமாறன். மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், சின்னமனூரில் உள்ள ஸ்ரீ கிருஷ்ண அய்யர் மேல்நிலைப்பள்ளி நிர்வாகம் பற்றிய புகார்கள் அரசுக்கு வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அந்தப் பள்ளியை அரசு எடுத்துக் கொண்டு நிர்வாகச் சீர்கேடுகளைக் களைய நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ; (அ) ஆம்.

(ஆ) மேற்படி பள்ளியின் ஆயுட்கால தலைவருக்கும் அதன் செயலாளர் மற்றும் உறுப்பினர்களுக்கிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக எழுந்த வழக்கு இன்னும் நீதிமன்றத்தில் முடிவாகாத நிலையில் உள்ளது, எனவே, அரசு இப்பொழுது மேல் நடவடிக்கை ஏதும் எடுக்க இயலாது.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே, உயர்நீதி மன்றம் ஒரு தீர்ப்பைக் கொடுத்து இருக்கிறது. அதன்படி அமைக்கப்பட்ட நிர்வாகக் குழுவை இப்போ